# சென்னை பூரண சுவிசேஷ ஊழியர் ஐக்கியம் மற்றும்

## அனைத்து திருச்சபைகளும் இணைந்து நடத்தும்

# பெந்தெகொஸ்தே – 2017

## 10 நாட்கள் தொடர் ஜெபம்

**மே 25 முதல் ஜூன் 3 வரை**

### ஜெபத்தின் கருப்பொருள்

1. பரிசுத்தாவியானவரின் அபிஷேகமும், வரங்களும் சபையில் ஊற்றப்பட
2. பரிசுத்தாவியானவரின் கனிகளால் சபை நிரப்பப்பட்டு, சாட்சி வாழ்க்கை வாழ
3. சபைகளில் சுவிசேஷ பாரமும், அழிந்து போகிற ஆத்துமா மேல் தாகமும் உண்டாக

**இந்த 10 நாட்களும் இந்த மூன்று அடிப்படையிலேயே இந்த ஜெபம் தயாரிக்கப்பட்டுள்ளது**

### 1ல் நாள்

1. பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்திய நாட்களுக்காக (கசப்பு, மூர்க்கம், கோபங்கள், துர்குணங்கள்) மன்னிப்பு கேட்டு ஜெபிப்போம். **(எபேசியர் 4 : 29–31)**
2. சிம்சோனைப்போல பரிசுத்த ஆவியானவரை இழந்து காணப்படும் யாவரும் மீண்டும் பரிசுத்தாவியானவரை பெற்றுக்கொள்ள வாஞ்சிக்க வேண்டுமென்றும், எதை இழந்தாலும் ஆவியானவரை இழக்கக் கூடாதென்றும் ஜெபிப்போம். **(நியா 16 : 20, சங் 51 : 11)**
3. பரிசுத்த ஆவியானவரையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ள தடையாக காணப்படும் ஒருமனமற்ற நிலைகள் மாறவும், சபை களுக்குள்ளும், தலைவர்களுக்கும் உண்மையான ஒரு மனம் உண்டாக வேண்டுமென்றும், பெந்தெகொஸ்தே நாளில் ஒருமனம்பட்டதைப் போல, எழுப்புதலுக்காக ஒருமனமாய் கூடிவர வேண்டுமென்றும் ஜெபிப்போம். **(அப்போஸ் 2 : 1, 1 : 14)**
4. இயேசுவிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரும் குண மாக்கப்பட்டதைப்போல இன்று முதல் நம் சபையிலிருந்தும், நம் போதகரிடத்திலிருந்து பரிசுத்தாவியானவரின் வல்லமை புறப்பட்டு திரள் ஜனங்கள் குணமாக்கப்பட வேண்டுமென்று பரிசுத்தாவியின் வல்லமையை வேண்டி ஜெபிப்போம். **(லூக்கா 6 : 19, 8 : 46)**
5. நம் தேசத்திலுள்ள புறஜாதியாரை கர்த்தருடைய வார்த்தை யினாலும், செய்கையினாலும் கீழ்படியப்பண்ணும்படிக்கு, கர்த்தர் தம்முடைய சபையையும்/தேவ ஊழியர்களையும் அற்புத அடை யாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும் நிரப்ப வேண்டுமென்று ஜெபிப்போம். **(ரோமர் 15 : 18)**
6. இந்நாட்களில் சபைகளும், தேவ ஊழியர்களும் ஒன்பது வரங்களினால் நிரப்பப்படவும், ஆவியின் வரங்கள் தடையின்றி கிரியை செய்ய வேண்டும் என்றும், சபைகள் ஆவியின் வரங்களை பெற்றுக்கொள்ள வாஞ்சையுடையவர்களாக காணப்பட வேண்டு மென்று ஜெபிப்போம். **(ரோமர் 1:10, I கொரி 1:7, I கொரி 14:1)**
7. தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாதபடி, தேவனுடைய நாமத்துக்கு மகிமையும், துதியையும் உண்டாக்கும்படி தேவ சபைகளும், தேவ ஊழியர்களும் கனி நிறைந்தவர்களாய் (சுபாவத்தில் மாற்றம், கிறிஸ்துவின் தன்மையுள்ளவர்கள்) வாழ்ந்து, கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டுமென்று ஜெபிப்போம். **(பிலிப்பியர் 1:9–10)**

### 2ம் நாள்

1. தேவனுடைய மகத்துவத்தையும், அற்புதங்களையும், அதிசயங் களையும் அவருடைய கரத்தின் கிரியைகளையும் கண்டும் இஸ்ரவேலர் முறு முறுத்து தேவனை கலகம் பண்ணி **“ஆவியானவரை விசனப் படுத்தியதுபோல”** நாமும் முறுமுறுத்து, கலகம் பண்ணி ஆவியான வரை விசனப்படுத்திய நாட்களுக்காக மன்னிப்பு கேட்டு பாரப்பட்டு ஜெபிப்போம். **(ஏசாயா 63 : 10)**
2. உலர்ந்து, மரித்து காணப்படும் அனைத்து சபைகளும் தேவனுடைய ஊழியர்களும் இன்று பரிசுத்த ஆவியானவரால் உயிரடைந்து, காலூன்றி மகாசேனையாக நிற்க பரிசுத்த ஆவியானவர் மீண்டுமொரு முறை நம் மத்தியில் ஊற்றப்பட வேண்டுமென்று ஜெபிப்போம். **(எசேக் 37 : 10, வெளி 3 : 1)**
3. பவுலின் கைகளினால் தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்து, வியாதியஸ்தர்களை குணமாக்கி, அசுத்த ஆவிகளையும் துரத்தியது போலவே, இன்றும் சபை மூலமாகவும், தேவனுடைய ஊழியர்கள் மூலமாகவும் இப்பேர்ப்பட்ட பலத்த கிரியைகள் நடைபெற வேண்டு மென்று ஜெபிப்போம். **(அப் 19 : 11–12)**
4. பரிசுத்த ஆவியானவரை பெற்ற நாம் அனைவரும் **“அந்நிய பாஷை”** அடையாளத்தோடே மட்டும் நின்றுவிடாமல், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுடைய சாயலாக (கிறிஸ்துவைப்போல) மாற வேண்டுமென்று ஜெபிப்போம். **(ரோமர் 8 : 29)**
5. ஆவியின் கனியில்லாமல் மாம்சத்தின் கிரியைகளில் வாழ்கின்றவர்கள் (கலா 5 : 19–21) தேவனுக்கு முன் கள்ளத்தனமாய் மனம் திரும்பாமல் (எரேமியா 3 : 10) உண்மையாகவே மனம் திரும்பி மனம் திரும்புவதற் கேற்ற கனிகளை கொடுக்க வேண்டுமென்று ஜெபிப்போம் **(மத் 3 : 8)**
6. கிறிஸ்துவின் அவயவயங்களாய் காணப்படும் தேவனுடைய பிள்ளை கள் தங்கள் சரீரத்தை பாவத்துக்கும் வேசித்தனத்துக்கும் விற்றுப் போடாமல் **(1 கொரி 6:15,16,18)** தங்கள் சரீரம் கிறிஸ்துவின் அவயமென்றும், நாம் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாயிருக்கிற தென்றும் எண்ணி, சரீரத்தினாலே பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்று ஜெபிப்போம். **(I கொரி 6 : 19–20)**
7. இன்று சபை இழந்து போன மாணிக்கமான **“சுவிசேஷ பணியை”** மீண்டும் தொடரவும், ஒவ்வொரு சபையும் சுவிசேஷமாகிய இயேசுகிறிஸ் துவையும், இயேசுவின் பாடுகளையும், உயிர்தெழுதலையும் தைரியமாக சொல்ல, ஆத்துமா தாகம் உண்டாக வேண்டுமென்று ஜெபிப்போம். **(அப் 5:42, I கொரி 9:16)**

## 3ம் நாள்

1. இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம் இன்றி வனாந்திரத்திலே இஸ்ரவேலர் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிக்கொடாமலும், தேவனுடைய வார்த்தைக்கு இருதயத்தை திறக்காமல் இருதயத்தை கடினப்படுத்தி, கர்த்தர் பேசும்போதெல்லாம் கர்த்தருடைய வார்த்தையை அலட்சியம் பண்ணி, பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நின்ற இஸ்ரவேலரைப்போல நாமும் எதிர்த்து நின்ற நாட்களுக்காக பரிசுத்தாவியானவரிடத்தில் மன்னிப்பு கேட்டு, கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் நம்மை அர்ப்பணித்து ஜெபிப்போம். **(அப்போஸ் 7:51)**
2. கர்த்தருக்கு பரிசுத்தமாக வாழ வேண்டிய திருச்சபைகள் கர்த்தர் சிநேகிக்கும் பரிசுத்தத்தை பரிசுத்த குலைச்சலாக மாற்றி **(மல்கி 2 : 11)** துணிகரமாக சபைகளுக்குள் செய்யப்படும் இரகசிய பாவங்கள், அருவருப்பிலிருந்து **(எசேக் 9:4)** விடுதலைப் பெற்று, சபையானது பரிசுத்தமாகவும், கர்த்தருக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழவும், வேண்டுமென்று ஜெபிப்போம். **(லேவி 20 : 26)**
3. பிலிப்பு மூலம் தேவன் பலத்த அதிசயங்களை செய்து, அநேகருக்குள்ளிருந்த அசுத்தாவிகள் சத்தமிட்டு புறப்பட்டதைப் போலவும், திரள் ஜனங்கள் குணமாக்கப்பட்டு சமாரியா முழுவதும் மிகுந்த சந்தோஷமுண்டானதைப்போலவே, இன்றும் நம் சபை மூலமும், நம்முடைய ஊழியர்கள் மூலமும் நம் பட்டணங்களில் பெரிய அதிசயங்கள் நடந்து, நம் பட்டணத்திற்கு நம் சபை மூலம் மிகுந்த சந்தோஷம் உண்டாகும்படி ஜெபிப்போம். **(அப்போஸ் 8 : 6–8)**
4. இயேசுகிறிஸ்து ஜெபம்பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டு பரிசுத்தாவியானவர் இறங்கியதைப் போலவும் **(லூக்கா 3 : 21–22)** ஆதிசபை ஜெபிக்கும் போது இடம் அசைந்து, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதைப் போலவும் **(அப் 4 : 31)** இன்றும் நம் சபைகளில் நடைபெறும் ஜெபங்கள் வெறும் கடமைக்காக நடைப்பெறாமல், சபை ஜெபிக்க கூடும் எல்லா நேரங்களிலும் பரிசுத்தாவியானவரின் வல்லமை நம்மிலும், நம் தேசத்திலும் பலமாயிறங்க கூடிய வல்லமையின் ஜெபமாக மாற வேண்டுமென்று ஜெபிப்போம்.
5. தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே நம் மூலமாய் தூஷிக்கப்படாதபடிக்கும் **(ரோமர் 2 : 24, 1 தீமோ 6 : 1)** தேவ வசனம் நம் மூலம் தூஷிக்கப்படாதபடிக்கு **(தீத்து 2 : 4–5)** அன்புள்ளவர்களாயும், நல்லவர்களாயும், கற்புள்ளவர்களாகவும், தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும் முன் மாதிரியான வாழ்க்கை வாழ்கின்றவர்களாக காணப்பட வேண்டுமென்று ஜெபிப்போம்.
6. தேவன் எதிர்பார்க்கும் நல்ல கனிகளை சபை கொடாமல் **(ஏசா 5 : 2, மத் 12 : 33)** மாம்ச கிரியைகளாகிய விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லி–சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதகங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் என்ற கசப்பான கனிகள் நம் சபையை விட்டு நீங்கி **(கலா5:2021)** கிறிஸ்துவினுடையவர்களாகிய சபையானது தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்தவர்களாய் காணப்பட வேண்டுமென்று ஜெபிப்போம். **(கலா 5 : 24)**
7. தேவன் பவுலை **"மக்கெதோனியா மக்களுக்கு"** சுவிசேஷத்தை அறிவிக்க உந்தி தள்ளியதைப்போல **(அப் 16:9–10)** தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் சுவிசேஷம் அறிவிப்பதை தனது தலையாகிய கடமையாக எண்ணி, ஆத்துமா பாரமடையவும், தாங்கள் வசிக்கும் பட்டணங்களிலும், தெருக்களிலும் தயக்கமின்றி சுவிசேஷம் அறிவித்து, ஆத்துமா ஆதாயம் செய்ய தங்கள் அர்ப்பணிக்க வேண்டுமென்று சுவிசேஷ பாரத்துக்காக ஜெபிப்போம். **(I கொரிந் 9:16)**

## 4ம் நாள்

1. பெந்தெகொஸ்தே நாளில் ஆதிசபை ஒருமனப்பட்டு ஓரிடத்தில் கூடியதுபோல **(அப் 2 : 1, 1 : 14)** இன்றும் சபைகளும், தலைவர் களும் கசப்பு, வைராக்கியங்கள், ஏற்றத்தாழ்வுகள், பிரிவினைகள், ஸ்தாபன பெருமைகள் **(1 பேதுரு 3 : 8–9)** ஆகியவற்றினால் ஒன்று கூடாமல், ஒருமனப்பட முடியாமல் பிரிந்து காணப்பட்ட நாட்களுக்காக உண்மையாக ஒருமனப்பட்டு, மன்னிப்பு கேட்டு மனம் திரும்பி ஜெபிப்போம்.
2. பெந்தேகொஸ்தே நாளில் பலத்த காற்றடித்து, அவர்கள் கூடி யிருந்த இடம் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, அந்நிய பாஷையில் பேசியதைப் போலவே **(அப் 2 : 2–4)** இன்று முதல் ஜெபத்துக்காக கூடுகிற அனைவர் மேலும் ஆவியானவர் வல்லமையாகவும், அக்கினியாகவும் இறங்கவும், பரிசுத்த ஆவி யானவரின் அபிஷேகத்தை அந்நிய பாஷை அடையாளத்தோடே யாவரும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சிறிது நேரம் கர்த்தரை ஸ்தோத்தரித்து ஜெபிப்போம்.
3. கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்றவர் இன்று சபையிலுள்ள குமாரர், குமாரத்திகள் மேலும், வாலிபர்கள், மூப்பர்கள் மேலும், ஊழியக்காரர், ஊழியக் காரிகள் மேலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை ஊற்ற வும், ஆவியானவர் ஊற்றப்படுவதினால் விசேஷமாக தீர்க்க தரிசன வரம் சபையில் கிரியை செய்யவும், தீர்க்கதரிசனத்தின் ஆவியானவர் வல்லமையாக இரங்கவும் ஜெபிப்போம். **(அப் 2 : 17–18)**
4. கிறிஸ்துவின் சீஷர்கள் என்று கூறும் நாம் அனைவரும் பகை, பிரிவினைகளை அகற்றி நாம் ஒருவரிலொருவர் அன்பென்னும் மிகுந்த கனிகளை கொடுத்து பிதாவை கனிகளினால் மகிமைப்படுத்துகிறவர்களாக காணப்பட வேண்டுமென்று ஜெபிப்போம். **(யோவான் 15 : 1–12)**
5. கிறிஸ்தவர்கள் மாம்சத்தின்படி நல்வேஷம் போடாமலும் **(கலா 6:12)** உலகத்துக்கு ஒத்த வேஷம் போடாமலும் **(ரோமர் 12 : 1)** எல்லா இடங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாய் தேவனுக்கு பிரியமுள்ள வாழ்க்கை வாழ தங்களை அர்ப்பணிக்கவும், ஜீவபலியாக தங்களை ஒப்புக் கொடுக்கவும் வேண்டுமென்றும் ஜெபிப்போம். **(ரோமர் 12 : 2)**
6. கிறிஸ்பு என்பவன் சுவிசேஷத்தை கேட்டு தன் வீட்டாருடன் இரட்சிக்கப்பட்டதைப் போலவும் **(அப் 18 : 8),** லீதியாள் சுவி சேஷத்துக்காக தன் இருதயத்தை திறந்து குடும்பமாக இரட்சிக்கப்பட்டதைப் போலவும் **(அப்போஸ் 16:14–15)** ஒவ்வொரு விசுவாசிகளும் தங்கள் தங்கள் குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவிக்க தீர்மானிக்கவும், தங்கள் முழு குடும்பத்தினரை ஆதாயப்படுத்த ஆத்தும தாகமுள்ளவர்களாய் மாற வேண்டுமென்றும் ஜெபிப்போம்.
7. இன்று சுவிசேஷம் அறிவிக்கவும், ஆத்தும ஆதாயம் செய்யவும் வெட்கப்பட்டும், பயந்தும் மவுனமாக காணப்படும் ஒவ்வொரு விசுவாசிகளும், ஊழியர்களும், பவுலைப்போலவும் **(அப்போஸ் 18 : 19)** எஸ்தரைப் போலவும் **(எஸ்தர் 4:14)** எல்லா இடங்களிலும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் மவுனமாயிராமலும், பயமில்லாமலும், சுவிசேஷத்தை தைரியமாக அறிவிக்க பரிசுத்த ஆவியானவர் அபிஷேகம் பண்ண வேண்டுமென்றும் பாரப்பட்டு ஜெபிப்போம்.

## 5ம் நாள்

1. **சிம்சோனைப்போல :**

   பாவத்தில் விழுந்து, ஆவியானவரும், ஆவியின் பெலனும் நம்மை விட்டு விலகியதையும் அறியாமல் எப்பொழுதும் போல கிறிஸ்தவ வாழ்க்கையும் வாழ்ந்து, ஊழியமும் செய்து வரும் நாம் ஒவ்வொருவரும் இழந்துபோன வல்லமையையும், அபிஷேகத்தையும் மீண்டும் கேட்டு மனம் திரும்பி பாரப்பட்டு ஜெபிப்போம். **(நியாயா 16 : 19–20)**

2. **தாவீதைப்போல :**

   எதை இழந்தாலும் தேவனுடைய பிரசன்னமும், தேவ சமூகமும் குறிப்பாக பரிசுத்தாவியானவரும் நம்மிடத்திலிருந்தும், சபையிலிருந்து எடுத்து கொள்ளபடாமலிருக்க வேண்டுமென்று தேவனிடத்தில் கெஞ்சி வேண்டுதல் செய்வோம். **(சங் 51 : 11–12)**

3. **மோசேயைப் போல :**

   எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேலரை மீட்கவும் **(யாத்திரகமம் 30:30–31)** அடிமையாக்கி வைத்த சகல விதமான பார்வோனின் வல்லமைகளை முறியடிக்க மோசேயை வல்லமையாய் பயன்படுத்தியதைப் போலவே, சாத்தானுக்கு அடிமையாகியுள்ள அனைவரையும் விடுதலையாக்க நம்மையும் நம் சபையையும், நம் ஊழியரையும் மோசேயைப் போல தேவன் வல்லமையாக பயன்படுத்த வேண்டுமென்று ஜெபிப்போம். **(யாத் 5 : 1, 6 : 1, 7 : 1)**

4. **பவுலைப் போல :**

விக்கிரகத்தினாலும், மந்திரத்தினாலும் நிறைந்து காணப்பட்ட எபேசு பட்டணத்தில பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்ட பவுலினால் பெரிய அற்புத அடையாளங்களை நடப்பித்து, விக்கிரகத்தின் வல்லமைகளை முறியடித்து, மந்திரவாதிகளையும் இரட்சித்ததுப் போலவே, இன்று ஜெபிக்க கூடியிருக்கும் நம்மையும் பவுலைப் போல தேவன் வல்லமையாக பயன்படுத்தவும், இந்திய தேசத்தின் விக்கிரகாராதனை முற்றிலும் எபேசு பட்டணம் போல அற்றுப்போக வேண்டுமென்று பரிசுத்தாவியின் புதிய வல்லமையை கேட்டு ஜெபிப்போம். **(அப்போஸ் 19:11–13,19,20, 27)**

5. **யோசேப்பைப் போல :**

இன்றைய சபைகளும் தேவ ஊழியர்களும் யோசேப்பைப் போல ஆவியின் கனிகளினால் நிரப்பப்பட்டு (ஆதி 49:22) எல்லா பொல்லாங்குக்கும் தங்களை விலக்கி, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடி தங்களை காத்து, உண்மையுள்ளவர்களாய் காணப்படவும் **(ஆதி 39:9)** பிறர் செய்த அநியாயங்களை மன்னித்து மறந்து விடுகிற நல்ல சுபாவங்கள் உடையவர்களாய் காணப்பட வேண்டுமென்றும் ஜெபிப்போம். **(ஆதி 41 : 51)**

6. **தானியேலைப் போல :**

தானியேல் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாமல் காத்துக் கொண்டதுப்போலவே **(தானியேல் 1:8)**, தேவனுடைய பிள்ளைகளும், தேவ ஊழியர்களும் தங்களை பொல்லாத சிந்தனை, கொலைபாதகங்கள், விபச்சாரம், வேசித்தனம், களவு, பொய்சாட்சி, தூஷணம் ஆகியவற்றினால் **(மத்தேயு 15:18–20)** தங்களை தீட்டுப்படுத்தாதபடி இருதயத்தில் சுத்தமுள்ள வாழ்க்கை வாழ தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று ஜெபிப்போம்.

7. **இயேசுவைப் போல :**

இயேசுவைப்போல, இன்றைய சபைகளும் தேவ ஊழியர்களும் மேய்ப்பனில்லாமல் சிதறடிக்கப்பட்டு தொய்ந்து போனவர்கள் மேல் மனதுருக்கமுள்ளவர்களாக காணப்படவும் **(மத்தேயு 9 : 36)** சகல பட்டணங்கள், கிராமங்கள் தோறும் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களாய் காணப்பட வேண்டுமென்றும் **(மத் 9 : 35)** சுவிசேஷ பணிக்காக சபையார் யாவரும் தீவிரமாக எழுந்து செயல்பட வேண்டுமென்று ஜெபிப்போம். **(மத்தேயு 9 : 27, 28)**

## 6ம் நாள்

1. தேவனுடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனமாகிய நாம் நம்மை தாழ்த்தாமல் பெருமையாக வாழ்ந்த வாழ்க்கைக்காக தேவனிடம் தாழ்மையோடே மன்னிப்பு கேட்டும், பாரப்பட்டு ஜெபிக்காத நாம் ஜெபிக்கவும், தேவனுடைய முகத்தை தேடாமல் இருந்த நாம் தேவனுடைய முகத்தை தேடவும், நம்முடைய அனைத்து பொல்லாத வழிகளை விட்டு மனம் திரும்பவும் நம்மை ஒப்புக் கொடுத்து ஜெபிப்போம். **(II நாளா 7 : 14)**

2. இயேசுகிறிஸ்து தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளை துரத்தி, பலவானை முந்தி கட்டியதைப் போலவும், சபைகளுக்கு விரோதமாக செயல்படும் பிசாசின் திட்டங்களையும், மனிதர்களின் செயல் திட்டங்களையும் முறியடித்து ஆவியில் நிறைந்து வல்லமையாக **"அந்நிய பாஷையில்"** போராடி ஜெபிப்போம். **(மத்தேயு 12 : 28–29)**

3. **எசேக்கியேல் 36 : 37** இன்படியே மந்தை பெருகுவதைப் போல சபைகளில் மனிதர்கள் பெருகவும், **அப்போஸ் 2 : 47** இன்படியே இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்து கொண்டு வரவும், திரள் திரளான ஜனங்கள் இரட்சிக்கப்படவும் சபைகளுக்கு குடும்பம் குடும்பமாய் ஜனங்கள் திரண்டு வர வேண்டுமென்று பாரப்பட்டு ஜெபிப்போம்.

4. **யோவான் 17:21– 22** இன்படியே பிதாவும் இயேசுவும் ஒன்றாயிருப்பதைப்போல், இன்றைய அனைத்து ஸ்தாபனங்களும், சபைகளும், ஸ்தாபன தலைவர்களும் ஏற்ற தாழ்வுகளையும், போட்டி பொறாமைகளையும் அகற்றி, ஒன்றாயும், ஒற்றுமையாகவும் அன்பாகவும் இருக்க வேண்டுமென்று பாரப்பட்டு ஜெபிப்போம்.

5. **ஏசாயா 56:7** இல் **"என்னுடைய வீடு"** சகல ஜனங்களுக்கும் ஜெப வீடு எனப்படும் என்று கூறியதைப் போலவே, சபைகளும் ஊழியர்களும் ஜெபத்தை புறக்கணிக்காமல் ஜெபத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவும், அனைத்து சபைகளிலும் ஜெபத்துக்கு திரள் திரளாய் ஜனங்களும், ஊழியர்களும் கலந்துக் கொள்ளவும், எல்லா சபைகளிலும் அதிகாலை ஜெபமும், இரவு ஜெபங்களும் வல்லமையாக நடைபெற ஜெப ஆவி ஊற்றப்பட வேண்டுமென்று ஜெபிப்போம்.

6. **யாத் 40 : 35–36** இன்படியும் **II நாளா 5 : 14** இன்படியேயும் கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பியதைப் போல, இன்று முதல் இதுவரை கண்டிராத தேவமகிமையினால் தேவனுடைய சபையும், ஊழியர்களும் நிரப்பப்பட வேண்டுமென்றும், தேவனுடைய மகிமை இறங்குவதை இந்தியா தேசம் காண வேண்டுமென்றும் ஜெபிப்போம்.

7. **ஏசாயா 8 : 18** இல் **"நானும் கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளைகளும்" கர்த்தராலே அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம்** என்று ஏசாயா கூறியதைப் போலவே கிறிஸ்தவ குடும்பங்களும், தேவ ஊழியர்களின் குடும்பங்களும் இந்தியாவுக்கும், சமுதாயத்துக்கும் அற்புதங்களாகவும், அடையாளங்களாகவும் முன் மாதிரியான சாட்சி வாழ்க்கை வாழ்ந்து கிறிஸ்துவை பிரதிபலிக்கிறவர்களாய் காணப்பட வேண்டுமென்று ஜெபிப்போம்.

## 7ம் நாள்

1. **வெளி 2:4** இன்படியே ஆதியிலே தேவன் மேல் வைத்த அன்பை விட்டு விட்டு நாமும் **எரேமியா 2:6** இன்படியே "கர்த்தரை விட்டு" தூரப்பட்டு மாயையைப் பின்பற்றி வீணராய் போனவர்களும் மீண்டும் கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்படவும், கர்த்தரை விட்டு தூரப்பட்ட நாம் கிறிஸ்துவோடே மீண்டும் நெருக்கமாக நெருங்கி வரவும், நாம் நம்மையே ஆராய்ந்து அர்ப்பணித்து ஜெபித்து தேவனோடே ஒப்புரவாகுவோம்.

2. **அப்போஸ்தலர் 6:8** இன்படியே ஸ்தேவானைப் போல இன்றைய சபைகள் விசுவாசத்தினாலும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் நிரப்பப்படவும், பெரிய பெரிய அற்புத அடையாளங்கள் நடைபெறவும் ஸ்தேவானை பயன்படுத்திய தேவன் நம் திருச்சபையையும், நம் ஊழியர்களையும் வல்லமையாய் பயன்படுத்த வேண்டுமென்று பாரப்பட்டு ஜெபிப்போம்.

3. **அப்போஸ் 10:38** இன்படியே தேவன் தம்முடைய சபையையும், தம்முடைய ஊழியர்களையும் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் நிரப்ப வேண்டுமென்றும், தேவன் நம்மனைவரோடுமிருந்து பிசாசின் வல்லமையில் அகப்பட்டவர்களை விடுவிக்கவும், சகல வியாதியஸ்தரையும் சுகமாக்கவும் தேவன் நம்மையும் வல்லமையாக பயன்படுத்த வேண்டுமென்று பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்துக்காக பாரப்பட்டு ஜெபிப்போம்.

4. **சகரியா 13:1** இன்படியே தேசத்திலுள்ள அழுக்கையும் அக்கிரமங்களையும், பாவங்களையும் நீக்கவும், நம் தேசமும், சபையும் சுத்திகரிக்கப்படவும் தேவன் ஜீவ ஊற்றாகிய பரிசுத்த ஆவியானவரை நம் தேசத்தின் மேல் ஊற்ற வேண்டுமென்று ஜெபிப்போம்.

5. **I கொரிந்தியர் 14:24–25** இன்படியே தீர்க்கதரிசன வரங்கள் சபைகளில் கிரியை செய்யவும், தீர்க்கதரிசன வரத்தினால் ஜனங்கள் உணர்த்துவிக்கப்பட்டு, நிதானிக்கப்பட்டு, இருதயத்தின் அந்தரங்கள் வெளியரங்கமாகி, இந்தியா தேசமே தேவனை பணிந்துக் கொண்டு, நம் தேவாதி தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவன் மெய்யாய் நமக்குள் வாசம் பண்ணுகிறார் என்று இந்தியா தேசம் அறிக்கையிடும் வண்ணம் தீர்க்கதரிசன வரம் நம் சபையில் ஊற்றப்பட வேண்டுமென்றும் பாரப்பட்டு ஜெபிப்போம்.

6. **எபேசியர் 4 : 31, 32** இன்படியே சபைகளுக்குள் காணப்படுகிற கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல் மற்றும் துர்குணமும் சபையை விட்டு நீங்கி கிறிஸ்துவின் சாயலாகிய தயவினாலும், மன உருக்கத்தினாலும் நிறைந்து ஒருவருக்கொருவர் மன்னிக்கிறவர்களாய் காணப்பட வேண்டுமென்றும் ஜெபிப்போம்.

## 8ம் நாள்

1. **II சாமுவேல் 1 : 21** இன்படியே தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவனைப் போல அவமதிக் கப்பட்டதைப் போல, சவுலைப் போல அபிஷேகம் பண்ணப்பட்ட நாம் அபிஷேகம் பண்ணப்படாத உலகத்தாரைப் போல நடந்துக் கொண்ட கீழ்த்தரமான வாழ்க்கைக்காக தேவனிடம் மன்னிப்புக் கேட்டு ஜெபிப்போம்.

2. **I சாமுவேல் 10 : 6** இன்படியே கர்த்தருடைய ஆவியானவரையும், அபிஷேகத்தையும் பெற்ற அனைவரும் பழைய மனுஷனை களைத்து விட்டு, புதிய மனுஷனாகிய இயேசுவை தரித்து, வேறு மனுஷனாகவும் மாற வேண்டு மென்று ஜெபிப்போம்.

3. **யாத்திராகமம் 30 : 30** இன்படியே தேவனுடைய சபையிலுள்ள யாவரும் கர்த்தருக்காக ஏதேனும் ஊழியம் செய்ய தேவனால் அபிஷேகிக்கப்பட வேண்டுமென்று ஊழிய அபிஷேகத்துக்காக ஜெபிப்போம்.

4. **I இராஜா 19 : 16** இன்படியே கர்த்தர் எலிசாவை தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணி பயன்படுத்தியதைத் போல தீர்க்கதரிசன அபிஷே கத்தினால் தேவன் தம் சபையை அபிஷேகிக்க வேண்டுமென்று தீர்க்கதரிசன அபிஷேகத்திற்காக ஜெபிப்போம்.

5. **II இராஜா 9 : 6** இன்படியே யெகூவை பரிசுத்தாவியினால் அபிஷேகம் பண்ணிய தேவன் இன்றும் நம்மையும் அபிஷேகம் பண்ணவும், யெகூவை கொண்டு **(II இராஜாக் 9 : 30–33)** யேசபேல் அழித்தவர் இன்றும் நம் தேசத்திலும், சபைகளுக்குள் காணப்படுகிற யேசபேல் ஆவிகளை **(வெளி 2 : 20)** அழிக்க தேவன் நம்மையும் இன்று அபிஷேகம் பண்ண வேண்டுமென்று அந்நிய பாஷை பேசி அபிஷே கத்தை பெறும் வரை வைராக்கியமாக ஜெபிப்போம்.

6. **ஏசாயா 61 : 1** இன்படியேயும், **லூக்கா 4 : 18** இன்படியேயும் தேவன் தாமே இயேசு கிறிஸ்துவை சுவிசேஷம் அறிவிக்க அபிஷேகம் பண்ணியதைப் போலவே, கர்த்தருடைய ஆவியானவர் சபைகளின் மேலும், தேவ ஊழியர்கள் மேலும் இறங்கவும், சுவிசேஷம் அறிவிக்கிற அபிஷேகத்தினால் நம்மை அபிஷேகம் பண்ண வேண்டுமென்று தேவனிடம் சுவிசேஷ அபிஷேகத்துக்காக ஜெபிப்போம்.

## 9ம் நாள்

1. **எரேமியா 20 : 7–9ம்** வசனத்தின்படியே அவமானம், நிந்தை, பரியாசத் தின் நிமித்தமாக தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தவும், ஊழியம் செய்யவும் மாட்டேன் என்றும் சோர்ந்து போய் காணப்பட்ட எரேமியாவை தேவனுடைய அக்கினி மீண்டும் ஆண்டவருக்கென்று எழுப்பச்செய்ததுப்போலவே, இன்றும் போதும் என்று காணப் படுகிறவர்களை பரிசுத்தாவியானவரின் அக்கினி மீண்டும் தட்டி யெழுப்ப வேண்டுமென்று ஜெபிப்போம்.

2. **லூக்கா 12 : 49ல்** அக்கினியை போட வந்தேன் என்ற வார்த்தையின் படியேயும் **மத்தேயு 3 : 11ல்** பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்தானம் கொடுப்பேன் என்ற வார்த்தையின்படியேயும், **அப் 2:3ல்** அக்கினிமயமான நாவு இறங்கியதைப் போலவும் இன்று கூடியிருக்கும் யாவர் மேலும் அக்கினி அபிஷேகம் உண்டாக வேண்டுமென்று அந்நிய பாஷையில் ஜெபிப்போம்.

3. **I இராஜா 18 : 38, 39** இன்படியே கர்த்தரிடத்திலிருந்து இறங்கி வந்த அக்கினியை ஜனங்கள் கண்டபோது முகங்குப்புற விழுந்து **"கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்"** என்று அறிக்கை செய்ததுப்போலவே, இன்றும் தேவன் இந்தியாவை பரிசுத்த அக்கினினால் நிரப்பவும், பரிசுத்தாவியானவரின் அக்கினியை காணும் இந்தியா **"கர்த்தரே தெய்வம்"** என்று அறிக்கை செய்து, தேவனுக்கு முன் இந்தியா தேசம் முகங்குப்புற விழவேண்டுமென்று ஜெபிப்போம்.

4. **ஏசாயா 6 : 6–7** இன்படியே பலிப்பீடத்தின் அக்கினி ஏசாயாவின் அசுத்த உதடுகளை தொட்டு, அக்கிரமங்களையும், பாவங்களையும் நீக்கியதுப் போலவே! இன்றும் தேவனுடைய ஆலயத்துக்குள் துணிகர மாக பாவத்திலும், அசுத்த உதடுகளோடு இருப்பவர்களை பலிப்பிட அக்கினி தொட்டு சுத்திகரிக்க வேண்டுமென்று ஜெபிப்போம்.

5. **ஏசாயா 64 : 1–2** இன்படியே தேவனுக்கும், சபைகளுக்கும் விரோதமாக எழும்புகிறவர்களின் சகலவிதமான திட்டங்கள் முறியடிக்கப்படவும், இயேசு கிறிஸ்துவின் நாமமேயல்லாமல் வேறொரு நாமமும் இல்லை என்று சத்துருவுக்கு தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் தேவனுடைய சந்நிதிக்கு முன் தத்தளிப்பதற்கும் தேவரீர் வானங்களை கிழித்திறங் கியதைப் போலவே இன்று பரிசுத்தாவியானவர் அக்கினியாகவும், அக்கினி அபிஷேகத்துடனும் இறங்கி சத்துருக்களை தத்தளிக்கப் பண்ண வேண்டுமென்று ஜெபிப்போம்.

6. **லேவியராகமம் 6 : 13** இன்படியே **"பலிப்பீடத்தின் அக்கினி எரிந்துக் கொண்டிருக்கவேண்டும்"**, அது ஒரு பொழுதும் அணைய கூடா தென்றபடியே, தேவன் நம்மேல் வைத்த அக்கினியை அனல் மூட்டி யெழுப்பவும் **(II தீமோத் 1 : 6)** தேவன் மேல் நாம் வைத்துள்ள நேசம், நேச அக்கினியாகவும், இந்த நேச அக்கினியை தண்ணீரும், வெள்ளங் களும், இனியொருப்பொழுதும் சபையை விட்டு அணைக்ககூடா தென்றும் ஜெபிப்போம் **(உன்னத 8 : 6–7)**

7. **வெளி 2 : 18–20** இன்படியே இன்றைய சபைகளுக்குள் காணப்படுகிற யேசபேலின் ஆவியாகிய வேசித்தனம், விக்கிரகாராதனை, வஞ்சிக்கிற ஆவிகளை சுட்டெரிக்க **"அக்கினி ஜீவாலைப் போன்ற"** கண்களுடன் பரிசுத்தாவியானவர் உலாவியதைப் போலவே இன்றைய சபைகளுக்குள் காணப்படும் அருவருப்பான யேசபேலின் ஆவியை சுட்டெரிக்க பரிசுத்தாவியானவர் அக்கினி ஜீவாலையோடே சபையின் நடுவே உலாவ வேண்டுமென்று ஜெபிப்போம்.

## 10ம் நாள்

1. பரிசுத்த ஆவியானவரையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ள தடையாக காணப்படும் ஒருமனமற்ற நிலைகள் மாறவும், சபைகளுக் குள்ளும், தலைவர்களுக்கும் உண்மையான ஒருமனம் உண்டாக வேண்டுமென்றும், பெந்தெகொஸ்தே நாளில் ஒரு மனம்பட்டதைப் போல, எழுப்புதலுக்காக ஒருமனமாய் கூடிவர வேண்டுமென்றும் ஜெபிப்போம். **(அப்போஸ் 2 : 1, 1 : 14)**

2. தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாதபடி, தேவனுடைய நாமத்துக்கு மகிமையும், துதியையும் உண்டாக்கும்படி தேவ சபைகளும், தேவ ஊழியர்களும் கனி நிறைந்தவர்களாய் **(சுபாவத்தில் மாற்றம், கிறிஸ்துவின் தன்மையுள்ளவர்கள்)** வாழ்ந்து, கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டுமென்று ஜெபிப்போம். **(பிலிப்பியர் 1:9–10)**

3. நம் தேசத்திலுள்ள புறஜாதியாரை கர்த்தருடைய வார்த்தை யினாலும், செய்கையினாலும் கீழ்படியப்பண்ணும்படிக்கு, கர்த்தர் தம்முடைய சபையையும்/தேவ ஊழியர்களையும் அற்புத அடை யாளங்களின் பலத்தினாலும், தேவஆவியின் பலத்தி னாலும் நிரப்ப வேண்டுமென்று ஜெபிப்போம். **(ரோமர் 15 : 18)**

4. உலர்ந்து, மரித்து காணப்படும் அனைத்து சபைகளும் தேவனுடைய ஊழியர்களும் இன்று பரிசுத்த ஆவியானவரால் உயிரடைந்து, காலூன்றி மகாசேனையாக நிற்க பரிசுத்த ஆவி யானவர் மீண்டுமொருமுறை நம் மத்தியில் ஊற்றப்பட வேண்டுமென்று ஜெபிப்போம். **(எசேக் 37 : 10, வெளி 3 : 1)**

5. விக்கிரகத்தினாலும், மந்திரத்தினாலும் நிறைந்து காணப்பட்ட எபேசு பட்டணத்தில பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்ட பவுலினால் பெரிய அற்புத அடையாளங்களை நடப்பித்து, விக்கிரகத்தின் வல்லமைகளை முறியடித்து, மந்திரவாதிகளையும் இரட்சித்ததுப் போலவே, இன்று ஜெபிக்க கூடியிருக்கும் நம்மையும் பவுலைப் போல தேவன் வல்லமையாக பயன்படுத்தவும், இந்திய தேசத்தின் விக்கிரகாராதனை முற்றிலும் எபேசு பட்டணம் போல அற்றுப்போக வேண்டுமென்று பரிசுத்தாவியின் புதிய வல்லமையை கேட்டு ஜெபிப்போம். **(அப்போஸ் 19:11–13,19,20, 27)**

**தொகுப்பு : சென்னை பூரண சுவிசேஷ ஊழியர் ஐக்கியம்**
**அப்போஸ்தலர் விக்டர் ராஜமணி**